IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கரிசல் நிலமும் மேலாண்மறைநாடு கிராமமும்

(Vertisal land and Melanmarainadu Village)

**முனைவர் மூ. பாலசுப்பிரமணியன்**

இணைப் பேராசிரியர், தமிழியல்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலை நகர்.

**ஆய்வுச் சுருக்கம்:** புனைக்கதை இலக்கியங்கள் நிலவியல் சூழல்களை இயல்பாகப் பதிவு செய்கின்றன. நிலவில் சார்ந்து படைக்கப்படும் படைப்புக்களை வட்டார இலக்கியங்கள் என வரையறுப்பர். தமிழ் வட்டார இலக்கியங்களில் கரிசல் வட்டார இலக்கியங்கள் தனித்துவமானவை. கரிசல் எழுத்தாளர்களில் மேலாண்மை பொன்னுச்சாமியும் ஒருவர். அவர் தனது படைப்பிற்கான வெளியாகத் தான் வாழ்ந்த மேலாண்மறைநாடு கிராமத்தை அமைத்துக் கொண்டார். அவரின் கதை இலக்கியங்கள் மேலாண்மறைநாடு கிராமத்தைக் களமாகக் கொண்டே படைக்கப்பட்டுள்ளன. அக்கதைகள் விவரிக்கும் மேலாண்மறைநாடு கிராமத்தைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

**Abstract** : Fictional literature naturally records geographical settings. Local literatures are defined as works based on land. Karisal literature is unique among Tamil vernacular literature. Mealanmai Ponnuchamy is one of the Karisal writers. He set up the village of Melanmarainadu where he lived as the space for his writings. His stories and literature are based on the village of Melanmarainadu. This article examines the village of Melanmarainadu described in the stories.

**திறவுச் சொற்கள் :** வட்டார இலக்கியம், கரிசல் வட்டார இலக்கியங்கள், கரிசல், மேலாண்மை பொன்னுச்சாமி, மேலாண்மறைநாடு, கிராமம் (Local Literature, Karisal Literature, Vertisal, Melanmai Ponnuchami, Melanmarainadu, Village)

**முன்னுரை**

இலக்கியங்கள் முப்பொருட்களின் அடிப்படையில் படைக்கப்படுமாற்றை தொல்காப்பியம் விவரிக்கின்றது. அவர் கூறிய இலக்கிய மரபு செய்யுள் இலக்கியங்களுக்கு மட்டுமல்ல, உரைநடை இலக்கியங்களுக்கும் பொருந்தும். நிகழ்ச்சியையும், நிகழ் வெளியையும், (Space) அதுசார்ந்த நிலவியல் இயல்புகளையும் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. உரைநடை இலக்கியங்களும் இவ்வாறான முப்பொருளை அடிப்படையாகக் கொண்டே படைக்கப்படுகின்றன. கதை

இலக்கியங்களில் கதைப்பொருளும் கதைக்களமும் மேற்கண்ட முப்பொருளைப் பேசுகின்றன. இங்ஙனம் படைக்கப்படும் கதை இலக்கியங்களை வட்டார இலக்கியங்கள் என்று வகைப்படுத்துவர். கரிசல் வட்டார இலக்கியங்கள் அந்நில இயல்புகளைக் கதைப்பொருளின் வழியே பதிவு செய்திருக்கின்றன. கரிசல் படைப்பாளர்களில் ஒருவரான மேலாண்மை பொன்னுச்சாமி தனது கதை இலக்கியங்களில் கரிசல் வட்டார இயல்புகளை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக அவர் பிறந்து வளர்ந்த மேலாண்மறைநாடு கிராமத்தை வெளியாகக் கொண்டு படைப்புகளைத் தந்துள்ளார். அங்ஙனம் அவரின் படைப்புகள் பேசும் மேலாண்மறைநாடு கிராமம் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

**மேலாண்மறைநாடு கிராமம்**

மேலாண்மை பொன்னுச்சாமி 400-க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 6 குறுநாவல்களையும், 7 நாவல்களையும் படைத்துள்ளார். இவரின் படைப்புகள் மேலாண்மறைநாடு என்னும் கிராமத்தைக் கதைக்களமாகக் (வெளி) கொண்டு படைக்கப்பட்டவை. அக்கிராம மக்களின் வாழ்வியல் சிக்கல்களை மையமாகக் கொண்டு தனது படைப்புகளைத் தந்துள்ளார்.

> “மேலாண்மறைநாடு கரிசல் பூமி. மானாவாரி நிலங்களையும், வறண்ட கிணறுகளையும் நம்பி விவசாயம் செய்யும் கிராமம். அக்கிராம மக்களின் வாழ்வு வறுமையோடு போராடுவதும் விவசாயம் இல்லாத காலத்தில் பிழைப்பிற்காக அருகிலிருக்கும் தீப்பெட்டி, பட்டாசு ஆலைகளுக்குச் செல்வதும்தான். வறுமை மட்டுமல்ல, சாதியம், பெண்ணடிமை தனம் போன்ற சிக்கல்களும் அவர்களுக்கு உண்டு. புதிய பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட மாற்றங்கள் அக்கிராம வாழ்வை, நரக வாழ்வாக மாற்றியது எனப் புதுச் சிக்கல்களும் உண்டு. இவற்றை கருக்களாகக் கொண்டே மேலாண்மை பொன்னுச்சாமி கதைகளைப் படைத்துள்ளார். அப்படைப்பிற்கு மேலாண்மைநாடு வெளியாக அமைந்துள்ளது. அவரின் கதைகளை நிரல்படுத்தினால் அக்கிராமத்தின் வரலாற்றை அறிய முடியும். மேலும், அவர் படைத்தளிக்கும் கதைகளின் சிக்கல்கள் மேலாண்மறைநாடு கிராமத்திற்கு மட்டுமல்ல இந்தியாவின் எல்லா கிராமத்திற்கும் பொதுவானது என்பதை உணர முடிகிறது.” [1]

என்னும் விளக்கத்தால் அறியலாம்.

**கரிசல் கிராமங்கள்**

தமிழகத்தின் நிலவியலை மண் அடிப்படையில் ஐந்தாகப் பகுப்பர். அவற்றில் ‘கரிசல்’ என்னும் மண் வகை திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், கோவை, ஈரோடு போன்ற மாவட்டங்களில் பரவிக் கிடக்கிறது. என்றாலும், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் இருக்கும் மண்வகையைக் கரிசல் என்கின்றனர். கோயில்பட்டியை மையமாகக் கொண்டு பரவிக் கிடக்கும் நிலப்பரப்புக் கரிசல் வட்டாரம் எனப்படுகிறது. ‘கரிசல்’ என்ற சொல்லுக்கு,

> “கருப்பு நிறங்கொண்ட மானாவாரி புஞ்சைப் பிரதேசம்” [2]

எனக் கி. ராஜநாராயணன் விளக்கம் தருகிறார். இந்நிலத்தைப் பொருத்தவரையில் ஆற்றுப்பாசனம் என்பது கானல் நீரே. வானத்தை மட்டுமே நம்பியிருக்கும் நிலை; தொடர்ந்து கிணற்று நீரைப் பயன்படுத்துதல்; அதிக வறட்சி போன்ற காரணங்களால் கரிசல் நிலத்தின் தன்மை வறண்டே காணப்படும். கரிசல் மண் தன்மையை மேலாண்மை பொன்னுச்சாமி,

> “வீட்டுக்குத் தெற்கில் புஞ்சை, தோலுரிந்த எலும்பாகக் கிடந்தது. ஓடை மணலைப் பறிகொடுத்துவிட்டுப் பாறையாய்ப் பல்லிளித்த ஓடையைக் கடந்து, ஊருணிக் கரையேறி வண்டிப் பாதையில் நடந்து…
>
> எங்கேயும் ஒரு பச்சை கிடையாது. காய்ந்த கனல் பறந்து கிடந்தது காடு. தீப்பிடித்த மாதிரி இருந்தது. புல்கூட காய்ந்து போய் தேன்நிறச் சருகுகளாய்…
>
> மழைத் தண்ணீர் இல்லாமல் மானாவாரிக் காடு முழுக்க சும்மா கிடந்தது. ஒரு வெள;ளாமைகூட இல்லை. இறவைக் கிணறுகளிலும் தண்ணீர் வரட்டிழுப்புதான், மிளகாச் செடிகள், தாயற்ற பிள்ளைகளாய்க் காய்ந்து வாடிச் சுருங்கிக் கிடந்தன.
>
> காலை வெயிலே வறண்ட அனலாய் வீசியது. துணுக்கு மேகங்கள் கூட இல்லை. கழுவிப் போட்ட பாத்திரமாய், ஆகாயம்” [3]

என விவரிப்பதன் வழி அதன் இயல்புகளைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

**மேலாண்மறை நாடு கிராமம்**

மேலாண்மை பொன்னுச்சாமி தனது படைப்புகளுக்கான வெளியாக மேலாண்மைறைநாடு என்னும் கிராமத்தைக் கொண்டிருந்தார். அக்கிராமம் விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்றது. கரிசல் கிராமங்களுக்குரிய அத்தனை அடையாளங்களைக் கொண்டிருக்கும் இக்கிராமம் குறித்துத் தனது படைப்புகளில் விவரித்துள்ளார். மேலாண்மறைநாட்டை மையமாகக் கொண்டு மற்றைய கரிசல் பகுதிகளையும் பேசியுள்ளார். அவரின் 99% கதைகள் இக்கிராமத்தையே வெளியாகக் கொண்டிருக்கின்றன என்பது இங்கு நினையத்தக்கது.

> “தண்ணீர் பிறப்பே காணாது, காய்ந்து கனல் பறந்து கிடக்கிற ஆறு… அசோகவனமாக வேலிமரக்காடு… வெட்டுப்பட்டுக் காய்ந்து கிடந்த முளகுமி… மஞ்சணத்தி மரம்… ஆற்றுக்கரையின் மண்சரிவு… தலைவிரி கோலமாகப் பேயாகக் கிடக்கிற வேலிமர விளார்கள்… நெருக்கமாக நாலு தூர்கள்… ஒடிந்து நொறுங்கிக் கிடக்கிற முள்குமி… விரல் நுழைக்க முடியாத அடர்த்தி, ஏகப்பட்ட கொழைதழைகள்.” [4]

என்னும் பகுதியால் கரிசல் நிலத்தின் வறட்சியை அடையாளமாகவும் எல்லையாகவும் கொண்டிருக்கும் அக்கிராமத்தை மேற்கண்டவாறு விளக்கியுள்ளார்.

**மேலாண்மறைநாடு ஊர் எல்லை**

மேலாண்மறைநாடு என்னும் கிராமம் இரண்டு மூன்று தெருக்களில் பல இன மக்கள் வாழ்கின்றனர். மேலும், மேலாண்மறைநாட்டின் ஊர் எல்லையை,

> “கிராமத்தின் விளிம்பைத் தழுவிக் கொண்டு வளைந்து கிடக்கிற ஓடை. நீர்ப்பிறப்பே கிடையாது. மூஞ்சி சிதைந்த பாறைக்காடு, ஓடை முழுக்க துருத்திக் கொண்டு நிற்கும் அடர்த்தியான வேலிமரக் காடு. அதைக் கடந்து...
>
> ரெண்டு புஞ்சை தாண்டினால்... சேரி. பத்து நாற்பது கூரைக்குடிசைகள். கட்டை மண் சுவர்கள். வாலை யாட்டிக் கொண்டு ‘உர்ர், உர்ர்’ ரென்று உலாவும் பன்றிகள். கொடிகட்டி காயப் போட்டிருக்கிற மாட்டுச் சவ்வுகளின் வீச்சம்.” 5

என்று மேலாண்மை விளக்கியுள்ளார்.

**விவசாய நிலத்தின் இயல்பு**

மேலாண்மறைநாடு கிராமத்தைச் சுற்றியிருக்கிற கரிசல் பூமயில் வறட்சியான விவசாயம் செய்யப்படுவதையும், நிலத்தின இயல்பையும், தண்ணீரின் தரத்தையும் மற்றொரு கதையில் விளக்கியுள்ளார். அதனை,

> “காடுகரைகளிலிருந்த பச்சைப்பசப்புகளை கோடை வெயிலும் காற்றும் தின்று தீர்த்து விட்டன. காpசல்காடுகளில் பயிர் பச்சையெல்லாம் ஓய்ந்து பழங்கதையாகி... உழுது போட்டு விட்டனர் சம்சாரிகள். இறவைத் தோட்டங்களிலும் பருத்தி ஓய்ந்து விட்டது. உழுது ஆறப் போட்டு விட்டனர். மிச்சமிருக்கிற ஒன்றிரண்டு தோட்டங்களிலும் கதை கந்தலாகிக் கிடக்கிறது. கோடை மழையில்லாமல் அகத்திகள் கூட நெஞ்சுவற்றிப் போய் இணுக்கு இணுக்காக இலைகளை ஆட்டிக் கொண்டு குச்சியாக நிற்கின்றன.” 6
>
> “கோவணத்துணி போல கொஞ்சமாய் நிலம். அதுவும் உப்புத் தண்ணீர்... வாயில் வைக்க முடியாது. வேப் பெண்ணையாய்க் குமட்டும். உப்புத் தண்ணி பாய்ந்து பாய்ந்து உவர் பொங்குகிற புஞ்சையில் மழையில்லா விட்டால் தீப்பிடித்த மாதிரிதான். பருத்திச் செடிகளெல்லாம் பட்டுப் போய் விட்டன. அகத்தியும் செத்துப் போயிற்று. வேறு என்ன செய்ய? எல்லாவற்றையும் பிடுங்கி துப்பர வாக்கி, நிலத்தை உழுது போட்டாகிவிட்டது.” 7

என்னும் மேற்கோள்களால் அறியலாம். மேலாண்மறைநாடு கிராமக் கரிசல் மண்ணின் தன்மையை,

> “ஊருக்குத் தெற்கே உப்பு மூலையில் நாலு குறுக்கம் கரிசல்காடு நற்சதுரமான காடு, நல்ல மண் கண்டம். உழுது போட்டால், ஈரல்கறி மாதிரி மினுமினுக்கும். சொல்லி வைத்த மாதிரி விளையும், காணப்பயறு, தட்டைப்பயறு, எள், நாற்றுச் சோளம் எது போட்டாலும், ஒன்றுக்கு நூறாக விளைச்சல் காட்டும்” 8

என்று, 'பூமிக்கும் பொறுக்காது' என்னும் கதை வழியே பேசியுள்ளார். கரிசல் மண் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், விளைச்சலுக்குக் குறைச்சல் இல்லாத பூமியாக இருந்துள்ளதை இதனால் உணரலாம்.

**வீடமைப்பு**

மேலாண்மறைநாடு கிராமத்தில் சாதிய ஏற்றத்தாழ்வுகளுக்கும், தொழில்களின் அடிப்படையிலும் வீடுகளும் அமைந்திருந்தன. பெரிய வீடுகளும் தொழிற் கூடங்களும் இங்கு காண்பது அரிது. ஒன்றிரண்டு பெரிய வீடுகளும், சில காரை வீடுகளும், சில ஓட்டு வீடுகளும், பல குடிசை வீடுகளுமே இருந்துள்ளமை கதைகளின் வழி அறிய முடிகின்றது. மேலாண்மை பொன்னுச்சாமியும் தனது படைப்புகளில் கூரை வீடுகளைப் பற்றியே அதிகம் பேசியுள்ளார். 'கூரை, உயிர்க்காற்று, குரூர நிறைவு, உயிரை விட, சொந்த வீடு' போல்வனவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

எளியோர் இல்லங்கள் பெரும்பாலும், கால்நடை வளர்ப்பிற்கான இடமாகவே முதன்மைப்படுத்தப்படும் அளவிற்கு இருந்துள்ளது. அங்ஙனம் கால்நடை வளர்க்கும் வீட்டை,

> "வீட்டுக்குப் பின்னல் தொழுவம். நாலு பக்கமும் வேலி முள் அடைப்பு, முள்வேலிச் சுவர், மேலே கூரைச் சாய்ப்பு, கிட்ட வந்தவுடன் நாசிக்கு சுகமான சாணக் கழிசல் நெடி. மூத்திரக் கவிச்சு வாசம்" 9

எனக் காட்சிப்படுத்தியுள்ளார் மேலாண்மை. அவர் கதைகளில் அதிகம் பேசப்பட்டுள்ள கூரை வீடுகள் பற்றி,

> "கூரை வீட்டுக்கு முன்னால் விரிந்த முற்றம். தினசரியான சாணப் பாலில் நிறம் மாறி இறுகிப்போன முற்றம். அதன் மாரி மூலையில் வெளிப்பானை, நாலைந்து பானைகளில் தண்ணீர். சிமெண்டுத் தொட்டி. அதைச்சுற்றி எந்நேரமும் ஈரப்பதம். பாசி பிடித்துப் போன சகதி " 10

என 'உயிர்க்காற்று' சிறுகதையிலும், வீட்டின் உள்ளமைப்பை, 'ருசி' சிறுகதையிலும் பேசியுள்ளார். வீட்டின் உள்ளமைப்புக் குறித்து,

> "கோழிக்கூடு போன்ற குறுகலான அடுப்பங்கரை. நெரிசலாக அடுக்கப்பட்டிருந்த சட்டி பெட்டிச் சாமான்கள். இவன் சற்று கூடுதலாக அசைந்தால் முழங்கை இடித்து தம்ளர்கள் உருளும். 'ணங்' கென்று பானை எச்சரித்து அதிர வைக்கும்" 11

என்னும் விவரிப்பால் அறியலாம். எளிய, தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியக் கதைகள் அமைந்துள்ளமையால், கூரை வீடுகள் பற்றியே அதிகம் பேசியுள்ளார்.

**ஊரின் மைதானம்**

கிராமங்களில் திறந்தவெளி பொதுவிடத்தை, 'மந்தை, மந்தைவெளி, மைதானம்' ஆகிய சொற்கள் புழக்கத்தில் உண்டு. மேலாண்மறைநாடு கிராமத்தின் பொதுப் பயன்பாட்டிற்கான திறந்தவெளி இடத்தை 'மைதானம்' என்று குறிப்பிட்டுள்ளனர். மேலாண்மறைநாட்டுக் கிராமத்தின் அடையாளமாகவே மாறிவிட்ட இம் மைதானம், அக்கிராமத்தின் கிழக்குப் பகுதியில் இருக்கிறது. மேலாண்மை பொன்னுச்சாமி இம்மைதானம் குறித்துச் சிறுகதைகள் பலவற்றில் பேசியுள்ளார். 'இழந்த உலகம், மைதானம், அரும்பு, பாட்டையா, உதிர்வு, இழப்பு, காகிதம், என் கனா, விரல், + 1 உலகம், மாயமாகும் மயில் உலகம், ஏழாப்பு, கடேசி பால், பாலகன்' போன்ற கதைகளில் மைதானம் முக்கிய களமாக இருக்கின்றது. விளையாடும் இடமாகக் குழந்தைகளுக்கு அறியப்படும் இம்மைதானம் பலரின் உலகமாகவே இருந்துள்ளதைக் கதைகளில் மேலாண்மை பதிவு செய்திருக்கிறார். அங்ஙனம் மைதானத்தைப் பற்றியும், அதைக் குழந்தைகள் இழங்கும் போது வரும் மன வருத்தங்களையும் 'மைதானம்' என்னும் கதையில் அழகாகப் பதிவு செய்துள்ளார். அதனை,

> "தெருவைவிட அவளுக்கு களம் ரொம்பப் பிடிக்கும். ஊருக்கு மேற்கேயுள்ள மைதானம் விளைந்த பொருள்களை சம்சாரிகள் காயப்போட்டு தூத்தி எடுக்கிற இடம். விரிவான களம், கடல் போல கண்ணை மூடிக் கொண்டு ஓடிப்பிடித்து விளையாடலாம். 'திரிதிரி பம்பக்கா' விளையாடலாம். வட்டமாய் உட்கார்ந்து கொண்டு 'கல்போகுது' விளையாடலாம் நேரம் போறதே தெரியாது. வெயில் கூட உறைக்காது. வீட்டு நினைப்பும் வராது. பசியும் தெரியாது அம்மா முதுகில் நாலு சாத்து சாத்துவாளே என்கிற நினைப்பும் வராது. விளையாட விளையாட ஆசையாய் இருக்கும்." [12]

என்று மைதானத்தில் குழந்தைகள் விளையாடுவதைப் பேசியிருக்கிறார்.

**முடிவுரை**

மேலாண்மை பொன்னுச்சாமி கரிசல் கிராமமான மேலாண்மறைநாடு கிராமத்தை வெளியாகக் கொண்டு படைப்புகளைத் தந்தவராவார். அவர் கிராமத்தின் வாழ்வியல் சிக்கல்களை மட்டுமே கதைகளாகப் புனைந்துள்ளமையால், இயல்பாக மேலாண்மறைநாடு கிராமத்தைப் பற்றிய விவரிப்புகள் கதைகளில் வெளிப்படுகின்றன. கரிசல் கிராமங்களுக்குரிய வறட்சியையும், ஏழையையும், ஏற்றத்தாழ்வுகளையும் அக்கிராமம் பெற்றிருந்தமையை அறிய முடிகின்றது. கதைக்கான வெளியாக மேலாண்மறைநாடு அமைந்துள்ளமையால், கதைக்கான சிக்கல்களை விளக்கக் கிராமத்தை எழுத்தில் இயல்பாக விவரித்துள்ளார்.

**சான்றெண் விளக்கம்:**

1. பாலசுப்பிரமணியன், மூ., மேலாண்மை பொன்னுச்சாமியின் படைப்பாக்க வெளி, ப. 18 & 19
2. ராஜநாராயணன், கி., கரிசல் வட்டார வழக்குச் சொல்லகராதி, ப. 17
3. மேலாண்மை பொன்னுச்சாமி, பூச்சுமை, ப. 81
4. மேலது., வெண்பூமணம், ப. 15
5. மேலது., விரல், ப. 13
6. மேலது., பூச்சுமை, ப. 93
7. மேலது., பூச்சுமை, ப. 95
8. மேலது., உயிர்க்காற்று, பூமிக்கும் பொறுக்காது, ப. 66
9. மேலது., ஒரு மாலை பூத்து வரும், ப. 15
10. மேலது., உயிர்க்காற்று, ப. 41
11. மேலது., ஒரு மாலை பூத்து வரும், ப. 73
12. மேலது., பூச்சுமை, ப. 121

**துணைநூற் பட்டியல்:**


1. பாலசுப்பிரமணியன், மூ., (2014) மேலாண்மை பொன்னுச்சாமியின் படைப்பாக்க வெளி, காவ்யா பதிப்பகம், சென்னை.
2. ராஜநாராயணன், கி., (1982) கரிசல் வட்டார வழக்குச் சொல்லகராதி, அன்னம் வெளியீடு, சிவகங்கை.
3. ஆறுமுகம், அ., (1989) நாட்டுப்புற இலக்கியமும் பண்பாடும், தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம்.
4. மேலாண்மை பொன்னுச்சாமி, (2004) பூச்சுமை, திருவரசு புத்தக நிலையம், சென்னை.
5. மேலது., (2005) வெண்பூமணம், கங்கை புத்தக நிலையம், சென்னை.
6. மேலது., (2003) விரல், கங்கை புத்தக நிலையம், சென்னை.
7. மேலது., (2004) உயிர்க்காற்று, வானதி பதிப்பகம், சென்னை.
8. மேலது., (2000) ஒரு மாலை பூத்து வரும், கங்கை புத்தக நிலையம், சென்னை.
9. மேலது., (2001) மானாவாரிப்பூ, வைகை வெளியீடு, மதுரை.